**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி. S. அபூர்வா,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 15–ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை**

**இ.ம.எண்.1/2024**

in

**அ.வ.எண்.73/2024**

ஜெயலட்சுமி ..... மனுதாரர்/வாதி

– எதிரிடை –

1.பழனிச்சாமி

2.ராஜாமணி

3.ஊராட்சி மன்றத்தலைவர்,
சின்னக்கலையம்புத்துார் ஊராட்சி,
சின்னக்கலையம்புத்துார்

4.மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் .......எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இந்த மனுவானது கடந்த 09.04.2025 ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.T.இராஜமாணிக்கம்,B.A.,L.L.B.,** அவர்கள் முன்னிலையாகியும், 1 ஆம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.பாண்டியராஜன், B.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், 2 ஆம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் ஒருதலைப் பட்சமாக்கப்பட்டும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று வழங்கும்...

## உத்தரவு

1) மனுச் சொத்துக்களின் இயற்கை அமைப்பையும், அதன் புறக்கூறுகளையும் மேற்படி சொத்தை சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் பார்வையிட்டும், நில அளவையர் உதவியுடன் அளவுகளை அளவீடு செய்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டக் கட்டளை **26 விதி 9–ன்** கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :**

2.1 மனுச்சொத்துக்கள் மனை வகையறாச் சொத்துக்கள் ஆகும் என்றும், தாவா சொத்துக்கள் திரு.சுப்புலு நாயுடு மகன் துரைச்சாமி என்பவருக்கு 09.06.1997 ஆம் தேதி கிரைய ஆவணத்தின்படி சர்வசுதந்திர பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கிரைய ஆவணம், பழனி எண்.2 இணை சார்பதிவகத்தில் ஆவண எண்.840/1997 ன் கீழ் பதிவாகி உள்ளது என்றும், மேற்படி துரைச்சாமி கிரைய நாளில் இருந்து தாவாச் சொத்துக்களை சர்வசுதந்திர பாத்தியமாக அனுபவித்து வந்தார் என்றும், கடந்த 09.02.1998 ஆம் தேதியன்று, மேற்படி துரைச்சாமி தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில், எனது கணவர் திரு.ஜெயபால் அவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றும், மேற்படி கிரைய ஆவணம் பழனி எண்.2 இணை சார்பதிவகத்தில் ஆவண எண்.171/1998 கீழ்

பதிவாதி உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. அதனை தொடர்ந்து, மேற்படி ஜெயபால் கிரையம் பெற்ற நாளில் இருந்து மனுதாரரின் குடும்பத்தாருடன் சேர்ந்து தாவா சொத்துக்களை சர்வ சுதந்திர பாத்தியமான அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி ஜெயபால் கடந்த 24.01.2022 ஆம் தேதி தாவாச் சொத்துக்களைப் பொருத்து எவர் ஒருவருக்கும் எவ்வித பாத்தியமும் செய்விக்காமல் Intestate ஆக இறந்து விட்டார் என்றும், மேற்படி ஜெயபாலின் இறப்பைத் தொடர்ந்து அவரது சட்டபூர்வ வாரிசுகளான தாயார் ரகுமாபாயும், மனைவியான நானும், மக்கள் தேவி, கண்ணா, கார்த்திகேயன் ஆகியோரும் சேர்ந்து கூட்டாக பத்திரப்படியும், பட்டாபடியும் தாவாச் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்ததாகவும், இதில் ரகுமாபாய் கடந்த 31.10.2022 ஆம் தேதி இறந்து விட்டார் என்றும், மனுதாரர் தனக்காகவும், லேட்.ஜெயபாலின் மற்ற வாரிசுகளுக்கும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்வதாகவும் கூறப்பட்டுள்ளது.

2.3 அதனை தொடர்ந்து, 1, 2 எதிர்மனுதாரர்கள் மூன்றாம் மனிதர்கள் என்றும், தாவா சொத்துக்களின் பேரில் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா வீடு வடக்குப் பார்த்த வாசலுடன் கட்டப்பட்டுள்ளது என்றும், அதில் அய்யப்பன் கோவில் உள்ளது என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் அய்யப்பன் கோவில் பூசாரியாக இருந்து வருகிறார் என்றும், இந்நிலையில் கடந்த 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாத முதல் வாரத்தில், தாவா வீட்டுக்கு வடக்குப்பக்கம் உள்ள காலியிடத்தில், தாவா வீட்டு வாசலுக்கு நேர் எதிர்புறம் வரிசையாக கழிப்பறைகள் கட்ட 1 ஆம் எதிர்மனுதாரர் முயற்சித்தார் என்றும், தாவா வீட்டை ஒட்டி வடக்குப் பக்கம்

1–1/2 அடி அகல கூரையடி இடம் விட்டுத்தான் தாவா வீடு கட்டப்பட்டது என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் கூரையடி இட அத்துக்கு கழிப்பறைகள் கட்ட ஏற்பாடு செய்ததால் நான் கடுமையாக ஆட்சேபித்தேன் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.4. அதனைத் தொடர்ந்து, நான் தாவாச் சொத்துக்களை அளந்து அத்துமால் காண, 16.10.2023 அன்று வட்டாட்சியர் அலுவலகத்தில் மனுச் செய்து அத்துடன் ரூ.800/–க்கு இ–சலானும் எடுத்து செலுத்தி உள்ளேன் என்றும், மனுதாரர் பலமுறை வட்டாட்சியர் அலுவலகத்தை அணுகியும் தாவா சொத்தை அளப்பதற்கு காலதாமதம் செய்து வந்தார் என்றும், இத்தகைய சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட 1ம் எதிர்மனுதாரர், தனது ஆட்சேபனையை மீறி தாவா வீட்டுக் கூரையடி அத்துக்கு வாசலுக்கு நேர் எதிர்புறம், சுற்றுச்சுவர் கூட கட்டாமல் வரிசையாக கழிப்பறைகளை அராஜகமான முறையில் கட்டிக்கொண்டார். மேற்படி கழிப்பறைகளின் கூரைத்தண்ணீர், தாவா வீடு மீது வந்து விழும் வண்ணம் வேண்டமென்றே கட்டி உள்ளார் என்றும், மனுதாரர் தாவா வீட்டு வாசலையும் பயன்படுத்த முடியாக வகையில், 1 ஆம் எதிர்மனுதாரரும் கோவிலுக்கு வரும் நபர்களும் சேர்ந்து நாசம் செய்து வருகின்றனர் என்றும், மனுதாரர் ஆட்சேபித்ததாகவும், மனுதாரரை 1 ஆம் எதிர்மனுதாரர் பெண் என்றும் பாராமல் அசிங்கமாக வார்த்தைகளால் திட்டியும், கொலை மிரட்டல் விடுத்தும் வருகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.5. அதனை தொடர்ந்து, மனுதாரார், 3 ஆம் எதிர்மனுதாரரிடமும், காவல்நிலையத்திலும் பலமுறையிட்டும், 1 ஆம் எதிர்மனுதாரர் எவர் சொல்லையும் கேட்காமல், திறந்த வெளியில் கழிப்பறைகளை கட்டி

சுகாதாரக் கேட்டினை ஏற்படுத்தி வருகிறார் என்றும், மனுதாரர் தாவா வீட்டில் குடியிருக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுவதாகவும், இதனால் வயதில் முதியவரான மனுதாரருக்கும், உடல்நிலிவுற்ற என் மகளுக்கும் உடல்நலக் கேடும், தாள முடியாத மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட நிலையை நீதிமன்றத்தில் நிரூபிக்கும்பொருட்டு மனுச்சொத்துக்களின் இயற்கை அமைப்பையும், அதன் புறக்கூறுகளையும் மேற்படி சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பையும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் பார்வையிட்டும் நிலஅளவையர் உதவியுடன் ஆக்ரமிப்பு அளவுகளை அளவீடு செய்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

3.1. வாதியின் தாவா சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி வேண்டியிருக்கிறது என்றும், வாதி தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பொறுத்து வாதியே தகுந்த ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் வாயிலாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், தாவாச் சொத்து வாதியின் கணவர் ஜெயபால் என்பவர் கடந்த 1998 ஆம் ஆண்டு பெற்ற அனுபவித்து வந்த நிலையில், தாவா சொத்துக்களை பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் மேற்படி ஜெயபால் அவர்கள் மனைவியான வாதியையும், மக்களான தேவி, கண்ணா, கார்த்திகேயன் ஆகியோர்களை வாரிசுகளாக

விட்டு விட்டு பிராது சொத்துக்களைப் பொறுத்து எந்தவித ஏற்பாடுகளும் செய்துவைக்காமல் இறந்துவிட்ட சூழ்நிலையில் பிராது சொத்து வாதிக்கும், அவரது மக்களுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டிருக்கும் சூழ்நிலையில் வாதி மட்டும் வழக்கை தாக்கல் செய்து மற்ற பங்குதாரர்களை வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்காமல் பரிகாரம் மட்டும் கோரியிருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2. அதனை தொடர்ந்து, விளம்புகை பரிகாரம் கோரினாலே சொத்தின் அனைத்து தரப்பினர்களையும் கண்டிப்பாக தரப்பினர்களாக சேர்க்க வேண்டும என்றும், அவ்வாறு வழக்கின் முக்கிய தரப்பினர்களை சேர்க்காமல் வாதி மட்டும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த காரணத்திற்காகவே வழக்கை தள்ளுபடி செய்யலாம் என்றும், தாவாச் சொத்திற்கு அனுபவப்படியும், ஆவணப்படியும் மேற்குப்பக்கம் வாசலாக வைத்து மட்டுமே பயன்படுத்த பாத்தியம் உள்ளது என்றும், ஆனால் இந்த வாதியோ வேண்டுமென்றே வடக்குப் பக்கம் வாசல் வைக்க வேண்டும் என்றும், அதனால் 1 ஆம் பிரதிவாதி பூசாரியாக இருந்து வரும் கோவிலுக்கு சொந்தமான இடத்தினை அபகரிக்கும் நோக்கத்தோடு மோசடியான இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.3. அதனை தொடர்ந்து, தற்போது வாதி வடக்குப் பக்கம் வாசல் வைப்பதாக கோரும் பகுதியில் 1ஆம் பிரதிவாதி கோவிலுக்கு வரும் பக்தர்களின் அவசர சூழ்நிலையை கருத்தில் கொண்டு கழிப்பறை அமைக்கப்பட்டு இருந்துவருவதை தற்போது கோவிலுக்கு வரும் பக்தர்கள் கழிப்பறை இல்லாமல் அவதிப்பட்டு வருவதை உணர்ந்த கோவில் நிர்வாகிகள் தற்போது கோவில் இடத்தில் பட்டாவிற்கும்

ஆவணங்களுக்கும் உட்பட்ட பகுதியில் கழிப்பறை கட்டுவரை வாதி வேண்டுமென்றே தடுத்து நிறுத்தம் நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டு தற்போது கழிப்பறை அமைக்கும் பகுதியில் இருப்பதாக கூறிக்கொண்டு வருகிறார் என்றும், அவ்வாறு வாதிக்கு வடக்கு பக்கத்தில் எந்தவித நடபாதையும், வாசல் பகுதியும் கிடையாது என்றும், வாதிக்கு மேற்கு வாசல் மட்டுமே பாத்தியப்பட்டதாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.4. அதனைத் தொடர்ந்து, 1 ஆம் பிரதிவாதி ஐயப்பன் கோவில் பூசாரி அந்த கோவிலுக்கு கடந்த 22.02.1990 ஆம் ஆண்டு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் மங்கம்மாள் – ராஜமாணிக்கம் ஆகிய இருவரும் கிரையம் பெற்று தங்களுடைய கிரையப் பத்திரத்தை 1 ஆம் பிரதிவாதியின் கோவில் நிர்வாகத்திற்கு அசல் ஆவணத்தை சமர்ப்பித்துவிட்டு சொத்தினை கோவிலுக்கு வாய்க்கரலாக தானமாக கொடுத்துள்ளார்கள் என்றும், 1 ஆம் பிரதிவாதியின் பூசாரியாக பணிபுரிந்து வரும் கோவில் இடமானது முழுக்க முழுக்க ஐயப்பன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடமாகும் என்றும், தற்போது வாதி ஏதோ அவர்களுக்கு பாத்தியப்பட்ட தாவாச் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து தற்போது அதில் கோவிலுக்கான கழிப்பறை கட்டுவதை நிறுத்தக்கோரியும் அந்த கழிப்பறை கட்டப்படும் இடத்தினை அப்புறப்படுத்தி வாதிக்கு கொடுக்க வேண்டும் என்று கோரி பரிகாரம் கோரியிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

3.5. இவ்வழக்கில் ஆணையர் நியமனம் செய்து வாதிக்கு பாத்தியப்பட்ட தாவாச் சொத்தினையும், 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினையும் அளந்து அத்துமால் செய்தால் தான் வாதி கோரும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்குமா? அல்லது

கிடைக்காதா என்பதை பற்றி தெளிவாக கூறமுடியும் என்றும், வாதிக்கு தனக்கு எந்தவித பாத்திய உரிமையும் இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டே 1ஆம் பிரதிவாதி பக்தர்களின் நலன் கருதி கோவிலுக்கு வருபவர்களின் அடிப்படை தேவையான கழிப்படை வசதி மற்றும் கார்த்திகை மாதம் முழுவதும் ஐயப்ப பக்தர்கள் கோவிலில் தங்கி அந்த மாதத்தில் கோவிலிலேயே குளித்துக்கொண்டு ஐயப்பனுக்கு மாலை அணிவித்திருந்த சமயம் கோவிலில் தங்கி விரதம் இருந்து பக்தர்கள் சபரிமலைக்கு செல்வது வழக்கம் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.6. அதனைத் தொடர்ந்து, பக்தர்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும்விதமாக 1ஆம் பிரதிவாதி கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் குளிக்குமிடம், கழிப்பிடம் அமைப்பதை வாதி ஏதோ கால்புணர்ச்சியுடன் செயல்பட்டுக்கொண்டு கோவிலின் கழிப்பிடம் மற்றும் குளிக்குமிடம் கட்டுவதை தடுத்து நிறுத்துவதற்காகவே மோசடியான இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதியின் சொத்திற்கும், 1ஆம் பிரதிவாதியின் சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மாணிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா என்பது ஆகும்."

6. **தீர்வு** :

6.1. மனுதாரர் தரப்பில் கடந்த 09.02.1998 ஆம் தேதியன்று, துரைச்சாமி என்பவரிடமிருந்து தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில், மனுதாரரின் கணவர் திரு.ஜெயபால் அவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றும், மேற்படி கிரைய ஆவணம் பழனி எண்.2 இணை சார்பதிவகத்தில் ஆவண எண்.171/1998 கீழ் பதிவாதி உள்ளது என்றும், ஜெயபால் கடந்த 24.01.2022 ஆம் தேதி தாவாச் சொத்துக்களைப் பொருத்து எவர் ஒருவருக்கும் எவ்வித பாத்தியமும் செய்விக்காமல் Intestate ஆக இறந்து விட்டார் என்றும், மேற்படி ஜெயபாலின் இறப்பைத் தொடர்ந்து அவரது சட்டபூர்வ வாரிசுகளான தாயார் ரகுமாபாயும், மனைவியான மனுதாரரும், அவரது மக்களான தேவி, கண்ணா, கார்த்திகேயன் ஆகியோரும் சேர்ந்து கூட்டாக பத்திரப்படியும், பட்டாபடியும் தாவாச் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்ததாகவும், இதில் ரகுமாபாய் கடந்த 31.10.2022 ஆம் தேதி இறந்து விட்டார் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் மூன்றாம் மனிதர்கள் என்றும், தாவா சொத்துக்களின் பேரில் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், கடந்த 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாத முதல் வாரத்தில், தாவா வீட்டுக்கு வடக்குப்பக்கம் உள்ள காலியிடத்தில், தாவா வீட்டு வாசலுக்கு நேர் எதிர்புறம் வரிசையாக கழிப்பறைகள் கட்ட 1 ஆம் எதிர்மனுதாரர் முயற்சித்தார் என்றும், தாவா வீட்டை ஒட்டி வடக்குப் பக்கம் 1–1/2 அடி அகல கூரையடி இடம் விட்டுத்தான் தாவா வீடு கட்டப்பட்டது என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் கூரையடி இட அத்துக்கு கழிப்பறைகள் கட்ட ஏற்பாடு செய்து தாவா வீட்டுக் கூரையடி அத்துக்கு வாசலுக்கு நேர் எதிர்புறம் சுற்றுச்சுவர் கூட கட்டாமல் வரிசையாக கழிப்பறைகளை அராஜகமான

முறையில் கட்டிக்கொண்டார் என்றும், மனுச்சொத்துக்களின் இயற்கை அமைப்பையும், அதன் புறக்கூறுகளையும் மேற்படி சொத்தில் எதிர்மனுதாரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்பையும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் பார்வையிட்டும் நிலஅளவையர் உதவியுடன் ஆக்ரமிப்பு அளவுகளை அளவீடு செய்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர் தரப்பில் தாவாச் சொத்து மனுதாரர்/ வாதியின் கணவர் ஜெயபால் என்பவர் கடந்த 1998 ஆம் ஆண்டு பெற்ற அனுபவித்து வந்த நிலையில், தாவா சொத்துக்களை பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் மேற்படி ஜெயபால் அவர்கள் மனைவியான மனுதாரரையும், மக்களான தேவி, கண்ணா, கார்த்திகேயன் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு விட்டு பிராது சொத்துக்களைப் பொறுத்து எந்தவித ஏற்பாடுகளும் செய்துவைக்காமல் இறந்துவிட்ட சூழ்நிலையில் பிராது சொத்து வாதிக்கும், அவரது மக்களுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டிருக்கும் சூழ்நிலையில் மனுதாரர்/வாதி மட்டும் மேற்படி வழக்கை தாக்கல் செய்து மற்ற பங்குதாரர்களை வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்காமல் பரிகாரம் மட்டும் கோரியிருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், தாவா சொத்திற்கு அனுபவப்படி ஆவணப்படி மேற்குப்பக்கம் வாசலாக மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

6.3. மனுச் சொத்துக்களில் உள்ள உரிமை குறித்து மனுதாரரே உரிய சாட்சிய, சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி நிரூபணம் செய்ய வேண்டும் என்று கருத்தில் கொண்டும் மேலும் எதிர்மனுதாரர் தனது

எதிருரையில், "இவ்வழக்கில் ஆணையர் நியமனம் செய்து வாதிக்கு பாத்தியப்பட்ட தாவாச் சொத்தினையும், 1 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினையும் அளந்து அத்துமால் செய்தால் தான் வாதி கோரும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்குமா? அல்லது கிடைக்காதா என்பதை பற்றி தெளிவாக கூறமுடியும்" என்று .............மேலும் **M. Devarajan Vs Sri Ramulu** என்ற வழக்கில் மாண்பமை உயர் நீதிமன்றம் " the suit for declaration and mandatory injunction, therefore, in order to prove the exact location of construction and to find out the encroachment, appointment of advocate commissioner is very essential" என்று குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றம் **Vaithinattar V. Sakkubal Ammal AIR 2004 Madras 419** என்ற வழக்கில் " in a suit for Declaration and Permanent Injunction, the dispute pertaining to portion of adjoining lands allegedly encroached by the defendants and the defendants denying that there was not such encroachment. This Hon'ble Court held that the best evidence in such case could be obtained only by the Appointment of advocate commissioner. Therefore, in my considered view, no prejudice will be caused to the respondent herein by appointing the advocate commissioner to visit the suit property along with the surveyor and note down the physical features. In fact, the advocate commissioner's report and plan would enable the court for the purpose of throwing more light or enlighten to arrive at a fair decision என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7. எனவே இவ்வழக்கு விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தில் 1 ஆம் பிரதிவாதி அத்துமீறி தாவா வீட்டு வாசல் முன்பாக கிழமேல் 49 நீளம் தென்வடல் 1–1/2 அடி நிலத்தையும், கிழமேல் 49 நீளம், தென்வடல் 1–1/2 அகலம் கொண்ட தாவா கூரையடி

நிலத்தையும் 1ஆம் பிரதிவாதி ஆக்கிரமித்து சிமெண்ட் தண்ணீர் தொட்டி கட்டியுள்ளார் என்று கூறம் நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், பத்திரப்படி வாதிக்கு மேற்கு வாசல் மட்டுமே பாத்தியப்பட்டது என்றும் எதிர் வாதம் செய்யப்பட்டது. எனவே மனு சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா ? இல்லையா ? நிலவியல் அமைப்பு எவ்வாறு உள்ளது என்பதை பார்வையிட்டு, நீதிமன்ற ஆணையர் அறிக்கை அளித்தால், அது அசல் வழக்கை முழுமையாக தீர்வு காண உதவும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

8. எனவே, மனு சொத்தை பார்வையிட்டு, அளந்து மேற்படி சொத்தின் நிலவியல் அமைப்பு குறித்தும், இயற்கை தன்மை குறித்தும் மற்றும் மனு சொத்தின் எல்லைகள் குறித்தும் அறிந்து கொள்ள நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அறிக்கை பெறுவது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நேரத்தை குறைக்கும் என்றும், மேலும் அவ்வாறு உத்தரவிடுவது வழக்கின் விசாரணைக்கு வாய்மொழி சாட்சியம் அதிகம் தேவைப்படாது என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9. முடிவாக, இந்த மனுவை அனுமதித்தும் மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு மனுச்சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் உதவியுடன் அளந்து அறிக்கை சமர்ப்பிக்க **P. Navas Charif** அவர்களை ஆணையராக நியமனம் செய்து அவருக்கு ஆணையர் ஊதியமாக ரூ.7,000/− என நிர்ணயம் செய்து மேற்படி ஊதியத்தை மனுதாரர் ஆணையரிடம் நேரடியாக செலுத்தும் படியும், வழக்கறிஞர்/ஆணையர் இரு தரப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி இரு தரப்பனர் முன்னிலையில், மனுச் சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம்

தாக்கல் செய்ய வாய்தா தேதி **16.06.2025.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/–S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றவாணங்கள்:– இல்லை.**

ஒம்/–S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.